தமிழ்நாடு, பாண்டிச்சேரி மட்டும்

ஜூன் 2016 விலை ரூ.20

# அக்ரி பிசினஸ்

பயிர்த்தொழில்... உயிர்த்தொழில்

மாத இதழ்



மழையையும் மக்களையும் வரவழைத்த

**மூலிகை மரப்பண்ணை**



**அசத்தும் அவுரி சாகுபடி**


## நாட்டு மாடுகளின் சிறப்பிதழ்!



நாட்டு மாட்டுப்பால், எரு வறட்டி, கோமியம், பூச்சிவிரட்டி...

## உலக வர்த்தகத்தை நோக்கி...

Scanned by CamScanner



● கோரா

## இயற்கை சாயத்திற்கான மூலப்பொருள்

# அசத்தும் அவுரி சாகுபடி

உலகில் வண்ணம் பூசுதல் என்பது பண்டையக்காலம் தொன்றுத்தொட்டு இருந்துவருகிறது. அதன் பரிமானம் பல மட்டங்களில் உருமாற்றம் பெற்றுவருகிறது. சாயம் ஏற்றுதல் என்பது அந்த காலத்தில் மிகச்சிறந்த தொழில் நுட்பமாக இருந்தாலும், முற்றிலும் இயற்கையிலேயே தான் தயார்செய்தனர்.

திரை ஓவியங்கள், சுவர் ஓவியங்கள், குகை ஓவியங்கள், கட்டிடக்கலைகள் என்ற வரிசையில் வண்ணம் பூசுதல் என்பது மிகச்சிறந்த கலையாக இருந்தது. இச்சாயங்கள் காய், பழம், பூ, செடி என தாவரத்தை அடிப்படையாகக் கொண்டே தயார் செய்தனர்.

அறிவியல் தொழில் நுட்பம் வளர்ச்சி அடைந்த நிலையில் 1880ல் இராசாயன வண்ணங்களை கண்டுப்பிடித்தனர். இதனால் பல்வேறு தாவரங்களின் பயன்பாடு என்பது மக்கள் மனதில்

> 1880ல் இராசாயன வண்ணங்களை கண்டுப்பிடித்தனர். இதனால் பல்வேறு தாவரங்களின் பயன்பாடு என்பது மக்கள் மனதில் இருந்து மறைந்து விட்டன. அவுரி என்ற தாவரம் என்றும் உலக அளவில் நீங்காத இடம்பிடித்து வருகிறது. அவுரி இந்திய வரலாற்றில் மிக முக்கிய இடம் பெறுகிறது.



Scanned by CamScanner

இருந்து மறைந்து விட்டன. அவுரி என்ற தாவரம் என்றும் உலக அளவில் நீங்காத இடம்பிடித்து வருகிறது. அவுரி இந்திய வரலாற்றில் மிக முக்கிய இடம் பெறுகிறது.

இந்தியாவில் காலணி ஆதிக்கமாக இருந்த பிரிட்டிஷ் பேரரசு ஆண்ட போது எத்தனையோ அடிப்படை வாழ்வியல் பண்புகள் பாரம்பரிய அறம் மாற்றியமைக்கப்பட்டது. இந்தியாவில் வேளாண்மை என்பது மக்கள் வாழ்வியலுக்காகவும் உள்ளூர் தேவைக்காகவும் மட்டும் தான் இருந்தது.

வாழ்வியலுக்கான பயிராக இருந்த முறையை முதன்முதலாக 1750ல் பிரிட்டிஷ் பேரரசு வங்காளத்தில் உணவுச்சாகுபடிக்காக இருந்த பல லட்ச ஏக்கரில் சாய் தயாரிப்புக்கான மூலப்பொருள் அவுரியை பயிர் செய்ய கட்டாயப்படுத்தினர். இதுதான் தற்போது அவுரியை பணப்பயிர், வணிகப்பயிர் என்ற சிந்தனையாக மாறியது.

19ம் நூற்றாண்டில் உலக வரலாற்றில் இந்தியாவில் வங்காள தேசம் முதல் இடம் வகித்தது. சுமார் 16 லட்சம் ஏக்கரில் அவுரி சாகுபடி செய்தனர். ஜெர்மன், ஃப்ரான்ஸ், இத்தாலி, ரஷ்யா, இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் அவுரி துணைப்பொருட்களான (இன்டிகோ) அடர் நீலம் வண்ணப்பவுடர் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது.

ஏன் ஆங்கிலேயர்கள் அவுரி சாயத்தை விரும்பினார்கள்?

அவுரி செடியில் இருந்து கிடைக்கும் அடர் நீலம் என்று சொல்லக்கூடிய இன்டிகோ சாயம் காட்டன் துணிகளில் ஏற்றப்படுகிறது. இது உடலுக்கு குளிர்ச்சியை தருகிறது, தோல் நோய் வராமல் தடுக்கிறது, கடற்கரை நகரங்களில் வாழ்வோர்களுக்கு ஏற்ற உடையாக உள்ளது.

குறிப்பாக தோல் நோய் வராமல் தடுப்பதால் பல நாடுகளில் இந்த வண்ணம் ஏற்றிய உடை சீருடையாக இருந்தது. இதனால் அவுரியை சாயம் ஏற்ற பிரிட்டிஷ் அரசு பயன்படுத்தியது. உலக வரலாற்றில் அரசியல் முக்கிய பங்குவகித்து. 1880களில் பல்வேறு இராசயன செயற்கை வண்ணங்கள் வந்தபின்பு அவுரியின் அவசியம் என்பது படிப்படியாக சரியத்தொடங்கியது.

கடந்த 50 ஆண்டுகளில் இராசயன சாய

**இது உடலுக்கு குளிர்ச்சியை தருகிறது, தோல் நோய் வராமல் தடுக்கிறது, கடற்கரை நகரங்களில் வாழ்வோர்களுக்கு ஏற்ற உடையாக உள்ளது.**

**1750ல் பிரிட்டிஷ் பேரரசு வங்காளத்தில் உணவுச்சாகுபடிக்காக இருந்த பல லட்ச ஏக்கரில் சாய தயாரிப்புக்கான மூலப்பொருள் அவுரியை பயிர் செய்ய கட்டாயப்படுத்தினர்.**

தொழிற்சாலையால் விண்ணுக்கும், மண்ணுக்கும், மனிதனுக்கும், நதிகளுக்கும் பல்வேறு கேடுகளை ஏற்படுத்தியுள்ளதை பல மட்டங்களில் நாம் பார்த்து உணர்ந்து வருகிறோம். சாய பட்டறையின் சாம்ராஜியம் என்று பெயர் பெற்ற திருப்பூர் மாவட்டம் தற்போது தீண்டாமை மாவட்டமாக மாறிவிட்டது.

நொய்யலாறு வேதி சாயத்தால் நோயுற்ற ஆறாக மாறி நாறிக்கொண்டு உள்ளது. பல ஆயிரக்கணக்கான நிலங்கள் வீணான நிலமாக மாறி விட்டன. தற்போது சமூக ஆர்வலர்களும், சுற்றுச்சூழல் காப்பாளர்களும் உழவர்களும் அவுரியின் அவசியம் பற்றி உணரத் தொடங்கி விட்டனர்.

பாரம்பரியம் என்று பல பேர் பேசினாலும் சிலர் மட்டுமே காப்பாற்றி வருகின்றனர். பாட்டி வைத்தியம், பரம்பரை வைத்தியம், ஓலைச்சுவடிகள் பாதுகாப்பு என்பது சிலரின் தனிக்கவனம் மூலம் பாதுகாக்கப்படுகிறது. என்பதே உண்மை

இந்த வழியில் திண்டிவனம் KMA Export குடும்பத்தினர் தொடர்ந்து 4 தலைமுறையாக அவுரியை பாதுகாத்து உழவர்கள் மத்தியில் பரவலாக்கி பயன்பாட்டையும், தேவையையும் புரிய வைத்து அவுரி சாகுபடியில் சாதித்து வருகின்றனர். இந்த அமைப்பின் **உரிமையாளர் அன்பழகன் அவர்கள் 'அக்ரி பிசினஸ்' இதழுக்காக தனது அனுபவங்களை பகிர்ந்துக்கொள்கிறார்.**

விழுப்பரம் மாவட்டம் திண்டிவனத்தில் இருந்து செஞ்சி செல்லும் முதன்மை சாலையில் சந்தைமேடு





Scanned by CamScanner

என்ற இடத்தில் KMA நிறுவனம் உள்ளது. இந்நிறுவனத்தின் உரிமையாளர் திரு.அன்பழகன் ஆவார்.

இவர் சேவை மனப்பாண்மை உள்ளவராகவும், காண எளியவராகவும், அனைவரிடத்திலும் அன்பும் அனுசரனையும் உள்ளவராக உள்ளார். இதனாலே இந்நிறுவனம் 100க்கும் மேற்பட்ட பணியாளர்களுக்கு வாழ்வழிப்பதாக உள்ளது.

இந்த அவுரி சாகுபடி ஒருங்கிணைப்பு என்பது பரம்பரையாக தொடர்ந்து செய்து வருகிறார்கள். தற்பொழுது விழுப்புரம் மாவட்டத்தில் வானூர், மயிலம், விக்கிரவாண்டி, மரக்காணம், செஞ்சி, காணை போன்ற பகுதிகளில் 100 ஏக்கருக்கு மேல் அவுரி சாகுபடி செய்து வருகின்றனர்.



இதனால் உழவர்கள் நல்ல லாபம் பெற்று வருகின்றனர். அவுரியின் பயன்பாடு என்பது எத்தனையோ இருந்தாலும் மூன்று மட்டும் முதன்மையானது.

(1) காற்றில் உள்ள தழைச்சத்தை (N) உட்கவர்ந்து மண்ணை வளமாக்கி பயிர் வளர்ச்சிக்கு உதவியாக இருப்பதால் நம் முன்னோர்கள் அவுரியை பசுந்தாள் உரமாக விதைத்து உழுது பயன்படுத்தி வந்தனர்.

(2) நாகரீகம் என்ற பெயரில் இளைய தலைமுறையின் இள நரையை மறைக்க இயற்கை கரும்பூச்சுக்கான பயன்பாட்டில் உள்ளது.

(3) உயர் நிலையில் உள்ளவர்களும், வசதியானோரும், சுற்றுச்சூழல் பாதுகாவலர்களும் குளிர்ச்சியைத் தரக்கூடிய உடல் நலத்தைக் காக்க கூடிய இந்த இயற்கை அடர்நீல சாயம் தோய்த்த துணி வகைகளை பயன்படுத்துகின்றனர். பல்வேறு வண்ணங்களை உருவாக்குவதில் மிக முக்கிய பங்கு வகிப்பது அவுரி சாயமாகும். சிவப்பு, கருப்பு, நீலம் என்ற மூன்று முதன்மை சாயங்களிலும் அவுரியின் பங்கு அதிகம்.

கண்கள் இருந்தும் குருடராக இருப்பது என்பது கல்வியறிவு அற்று படிக்க முடியாதவர்களை குறிப்பிடுகிறது. அதுபோல நிலம் இருந்தும் நட்டம் என்று உழவர்கள் இருப்பதையே மேற்கொள் காட்டுகிறது. இதற்கான அடிப்படை காரணமாக பயிர் திட்டமிடாமை அதிக செலவுகள் சந்தையில் ஏற்படும் ஏமாற்றம் போன்றவை காரணமாகும். இவற்றையெல்லாம் தவிர்க்க அன்பழகன் உழவர்களை அவுரி சாகுபடி செய்ய அழைக்கிறார்.

**உட்கவர்ந்து மண்ணை வளமாக்கி பயிர் வளர்ச்சிக்கு உதவியாக இருப்பதால் நம் முன்னோர்கள் அவுரியை பசுந்தாள் உரமாக விதைத்து உழுது பயன்படுத்தி வந்தனர்.**

**அவுரி சாகுபடியின் சிறப்புகள்**

- ஆடு, மாடு மேயாது.
- திருட முடியாது.
- வறட்சியைத் தாங்கும்.
- பூச்சி தாக்காது.
- வேதி உரம் தேவையில்லை.
- இடை தரகர்கள் இல்லா நேரடி விற்பனை.
- மண் வளம் கூடும்.
- எல்லா நிலத்துக்கும் ஏற்றது.
- கழிவுகள் மீண்டும் உரமாக பயன்படுகிறது.

### சாகுபடி விபரம்

அவுரி சாகுபடியில் மகசூல் என்பது தழை தான். எனவே நமது கவனம் செடியின் வளர்ச்சியை வேகப்படுத்துவதாக இருக்க வேண்டும். தண்ணீர் வசதி உள்ளவர்கள் எப்போது வேண்டுமானாலும் விதைக்கலாம். மானாவாரியை பொறுத்தவரை கார்த்திகை, மார்கழி, தை ஆகிய மாதங்களில் விதைப்பது நல்லது.

ஒரு ஏக்கருக்கு 6 கிலோ விதை போதுமானது விதைத்த நாளிலிருந்து 90 முதல் 100 நாளில் முதல் அறுவடையும் முதல் அறுவடையில் இருந்து 50ம் நாள் இரண்டாவது அறுவடையும், அடுத்த 50 வது நாளில் மூன்றாம் அறுவடையும் செய்யலாம். இவ்வாறு 200 நாளில் மூன்று முறை அறுவடை செய்யலாம்.

200 நாட்களுக்குப்பிறகு மீண்டும் உழுது



Scanned by CamScanner



சாகுபடி செய்ய துவங்க வேண்டும். ஒவ்வொரு முறையும் பூக்கும் தருவாயில் உடனடியாக அறுவடை செய்ய வேண்டும். அறுவடைக்கான தொழில் நுட்பம் மிக முக்கியம். தினசரி அறுவடை செய்வதை தினசரி பசுமை மாறாமல் காயவைத்து எடுக்க வேண்டும். இது தொடர்பாக KMA நிறுவனம் உடன் இருந்து சாகுபடி பணிகளை ஊக்கப்படுத்தும்.

**ஒரு ஏக்கரில் கிடைக்கும் லாபம்**

விதைத்த 100 வது நாளில் முதல் அறுவடை
300 கிலோ x ரூ 80 = 24,000
2வது அறுவடை அடுத்த 50வது நாளில்
400 கிலோ x ரூ 80 = 32,000
3வது அறுவடை அடுத்த 50வது நாளில்
400 கிலோ x ரூ 80 = 32,000
88,000

இந்த மகசூல் சாதாரணமாக தண்ணீர் வசதியில்லாத வளம் இழந்த மண்ணில் கூட எடுக்க முடியும். இதில் என்ன சிறப்பு என்றால் நீர் தேவையோ, வேதி உரமோ, பூச்சிக் கொல்லியோ, களை எடுப்போ எச்செலவும் செய்யாமல் வருமானம் மட்டும் பார்க்க முடியும். உழவு மற்றும் கண்காணிப்பு என்பது எல்லா பயிர்களையும் போன்றதே. கிலோ விதை 150 லிருந்து 200 வரை

**KMA நிறுவனத்தின் உறுதிமொழிகள்**

- விதைகள் KMA யில் கிடைக்கும்.
- அறுவடை தொழில் நுட்பம் KMA மூலம் கிடைக்கும்.
- உறுதியான கொள்முதல்
- சாகுபடிக்கு பின், அறுவடைக்கு முன் முன்பணம் வழங்கப்படுகிறது.
- தமிழகத்தில் எந்த மாவட்டத்தில் செய்தாலும் நிபந்தனைகள் கூடிய கொள்முதல்
- அவுரி இலையின் விலை கிலோ 50 ரூபாய் முதல் 80 ரூபாய் வரை உள்ளது.
- 2016 இந்த ஆண்டு ஒரு கிலோ 80 ரூபாய்
- இடைதரகர்கள் இல்லை.

**செயல்பாடுகள்**

KMA நிறுவனம் விழுப்புரம் மாவட்டத்தில் 7 ஒன்றியங்கள் அவுரி சாகுபடி குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது. 500 க்கும் மேற்பட்ட விவசாயிகள் ஆண்டு முழுவதும் சுமார் 1000 ஏக்கரில் அவுரி சாகுபடி செய்து வருகிறது. ஏக்கர் ஒன்றுக்கு சுமார் 1000 கிலோ வீதம் ஆண்டுக்கு 1000 x 1000 = 10,00,000 kg 10 லட்சம் கிலோ அவுரி இலைகள் கொள்முதல் செய்து வருகின்றனர்.

1 கிலோ 80 வீதம் 10 லட்சம் x 80 ரூபாய் எனில் சுமார் 8 கோடி ரூபாய் அளவிற்கு அவுரி கொள்முதல் செய்து இந்த பகுதி உழவர்களை KMA நிறுவனம் ஊக்கப்படுத்தி வருகிறது. இந்த KMA நிறுவனம் பரம்பரையாக செயல்பட்டு வருகிறது. தற்போது அதன் இயக்குநர் திரு. அன்பழகன் அவர்கள் பல்வேறு துறைகளுடன் தொடர்புடையவர்.

தொண்டு உள்ளம் கொண்டவர். தமிழகத்தில் லட்சக்கணக்கான ஏக்கரில் பயிர் செய்தாலும் சந்தை என்பது மிக எளிது என்கிறார். யார் வேண்டுமானாலும் சாகுபடி செய்யலாம். விதை முதல் விற்பனை வரை அனைத்து தொழில் நுட்பங்களையும் கொடுக்க காத்திருக்கிறது. திரு.அன்பழன் அவர்களை தொடர்புகொள்ள 94432 41290



Scanned by CamScanner